**தலைப்பு 250 - அரச கணக்குகள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 250 - அரச கணக்குகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 18 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பிரதான பேரேட்டுக் கணக்குகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச கணக்குகள் திணைக்களத்தினால் பிரதான பேரேட்டுக் கணக்கின் கீழ் முற்பணக் கணக்குகள், வைப்புக் கணக்குகள், அரச சேவை நலன்புரித் பிணையாளர் சங்கத்தின் கணக்கு, கிரவுன்ட் முகவரான்மையின் அனுப்பல் கணக்கு மற்றும் கிரவுன்ட் முகவரான்மையின் செலாவனி நட்டக் கணக்கு ஆகியன பேணப்பட்டு இருந்தன. நிதிச் செயலாற்றல் கூற்றின் முற்பணக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகளுக்குரிய பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் | நிதிச் செயலாற்றல் அறிக்கை தொடர்பான மாதிரியானது பொதுவாக அனைத்து அறிக்கையிடல் பிரிவுகளுக்கும் உரிய விதத்திலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மாதிரிப் பத்திரங்களில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | ஒரே விடயத்தின் அடிப்படையில் திரட்டப்பட்டிருந்த கணக்கு களிடையே இரண்டு மாத்திரம் விபரமானதாகவும் ஏனைய கணக்குகள் திரட்டியும் காண்பிக்கப்படின் அது நிதிக் கூற்றுக்களில் தெளிவுபடுத்தப்பட வேண்டும். |

தனித்தனியாக காண்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய மூன்று கணக்குகள் தொடர்பில் விபரங்கள் குறிப்பிடாது பிரதான லெஜர் கணக்கு பெறுவனவாக ரூபா 281,578 தொகையும் கொடுப்பனவாக 278,633,944 தொகையும் குறிப்பிப்பட்டிருந்தது. இந்த திரண்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் வெளிப்படுத்தலொன்றும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை

### 1.6.2 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி மீதி ரூபா 22,638,476 ஆகக் காணப்பட்டது. திருத்தப்பட்ட ACA-7 மாதிரியில் குற்பிடப்பட்டுள்ள கட்டுநிதியில் இணக்கக் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி சீராக்கல் மீதி ரூபா 22,638,476 ஆகக் காணப்பட்டது. அந்த மீதி நிதிச் செயலாற்றல் கூற்றின் கட்டுநிதி மீதியில் சீராக்கும் போது ரூபா 45,276,952 ஆகும். எனினும் கட்டுநிதி சீராக்கல் மீதி மறை (-) ரூபா 22,638,476 ஆக காணப்பட வேண்டிய போதிலும் அது திருத்தப்பட்ட ACA 7 மாதிரியில் சரியாக சமர்ப்பிக்கப்பட்டிராமையால் நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுகளின் பிரகாரம் கட்டுநிதிக் கணக்கின் மீதி பூச்சியப் பெறுமதியாக நடைமுறைக்குப் பொருத்தமற்றதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2021 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பிலான 2021.11.26 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/03 இனட 7.5 ஆம் பந்தியின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆம் திகதிய நிதிச் செயலாற்றல் கூற்றின் மீதி, கட்டுநிதி இணக்கக் கூற்றின் மீதி ஆகியனவை ஆண்டின் இறுதியில் உள்ளபடியான கட்டுநிதி மீதியின் கூட்டுத் தொகைக்கு சமனாதல் வேண்டும். | SA/MAA/02/01/01 ஆம் இலக்க மற்றும் 2021 திசெம்பர் 30 ஆம் திகதி வெளியிடப் பட்டிருந்த அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகள் நடைமுறைக்குச் சார்த்தியமானதாக சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் காசு செலவிடல்கள் என பௌதீக சொத்துக்களின் நிர்மானங்கள் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீட்டுகளை சுவீகரித்தலாக ரூபா 10,307,311 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான அப் பெறுமதி 2,731,589 ஆக காணப்பட்டமையால் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 2,575,722 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மிகவும் பொருத்தமான முறையில் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிப்பதற்கு உரிய அறிவுரைகள் 2022 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிப்பதற்கு உரியதான வழிகாட்டல்களை உள்ளடக்குவதற்கும் குறித்து வைக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான மாதிரிகள் மற்றும் வழிகாட்டல்களின் மூலம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் முறைமைப்படுத்தப் பட வேண்டியவை. |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திணைக்களத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பொ.ம.க.ப. 66 மாதிரி மற்றும் திணைக்களத்தின் பிரதான பொருள் பட்டியல் புத்தகம் ஆகியவற்றின் இடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் பிரதான பொருட்பட்டியல் புத்தகத்தை நாளதுவரையாக்குதல் மற்றும் பேணுதல் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தின் பிரதான பொருட்பட்டியல் புத்தகத்தை சரியாக சமப்படுத்தி 2022.01.01 ஆந் திகதியில் உள்ளபடியான மீதியை முன்கொண்டு வந்து நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குறைநிரப்பு மதிப்பீட்டின் ஒதுக்கீட்டின் மூலம் அரச ஊழியருக்கான ஆதனக் கடன் வட்டி (1506) செலவின விடயத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 75,000 ஆன நிதியேற்பாடு மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று வந்திருந்த உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்தவாறு ஆதனக் கடன்களுக்கு விண்ணப்பிக்காமையால் இந்நிதியேற்பாடு எஞ்சியுள்ளது. | அத்தியாவசிய மான செலவினங்களுக் காக மாத்திரம் குறைநிரப்பு மதிப்பீட்டின் ஊடான ஒதுக்கங்களைப் பெற்றுக்கொள்வத ற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | இயந்திரம் மற்றும் உபகரணங்கள் (2002) செலவின விடயங்களுக்காக வருடாந்த வரவு செலவுத்திட்டம் ரூபா 50,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அது அந்த மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. | சிக்கனமான முறையில் இயந்திரத்தை பயன்படுத்திய காரணத்தினால் இயந்திரங்களின் புரனமைப்பு மற்றும் மேம்படுத்தல்களின் தேவைப்பாடு ஆண்டினுள் ஏற்படாமையால் இந் நிதியேற்பாடு எஞ்சியுள்ளது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் நடைமுறைக்குப் பொருத்தமான தாகவும் வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியவை. |
| (இ) | மீண்டெழும் செலவின விடயமொன்று மற்றும் 02 மூலதன செலவீன விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபா 8,285,945 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவின விடயங்களினதும் அது தேறிய நிதியேற்பாடு 55 | நாட்டினுள் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை நிலவியதால் AGOA (Association of Government Accountants) இன் வருடாந்த பங்களிப்புக் கட்டணம் செலுத்துவதற்கு வங்கியினால் அந்நியச் செலாவணி வெளியிடாமை, திட்டமிடப்பட்ட தங்குமிட பதவியணிப் பயிற்சிகள் இரத்துச் செய்யப்பட்டமை மற்றும் இடைக்கால வரையறையினுள் அரச | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் நடைமுறைக்குப் பொருத்தமான தாகவும் வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியவை. |

| | | |
|---|---|---|
| சதவீதம் மற்றும் 90 சதவீதமாக காணப்பட்டது. | நிறுவனங்களுக்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் (Customized Accounting Standards) பின்பற்றப்படாமை காரணமாக நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 திசெம்பர் 17 ஆம் திகதி மரணமடைந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் 2013 திசெம்பர் 04 ஆந் திகதி சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 297,799 கூட்டுத் தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் திணைக்களம் தவறியிருந்தது. | ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 164,953 ஆன கடன் மீதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ள உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட அலுவல்கள் திணைக்களத்திடமிருந்து விசாரிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் உத்தியோகத்தர் ஒருவரின் நிலுவையான ரூபா 132,846 ஆன கடன் மீதியினை அறவிடுவதற்கும் வழக்குத் தொடுப்பதற்கும் வழக்குத் தொடுத்த பின்னர் அவரால் கடன்மீதி காசாகத் தீர்ப்பதற்கு இணங்கியதாக எழுத்து மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்காக அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு போதிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியவை. |

### 2.2.2 நானாவித முற்பணக் கணக்கு

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நானாவித முற்பணக் கணக்கின் மீதி ரூபா 142,510,262 ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நானாவித முற்பணக் கணக்கின் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டு வரப்படும் ரூபா 136,188,477 ஆன மீதியொன்று நிலவியது. அம் மீதியின் 87 சதவீதம் அல்லது ரூபா 118,050,237 தொகை பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டச் செயலகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த நிலுவை முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நானவித முற்பணக்கணக்கின் நிலுவை மீதிகள் ரூபா 142,510,261.69 ஆகும் அரச திணைக்களம் இந்த நிலுவை முற்பணத்தை அறவிடுவதற்காக நடுவர் ஒருவராக மாத்திரம் செயற்படுவதுடன் முற்பணத்தை அறவிடுவதற்கு நேரடியாக தலையீடு செய்யும் இயலுமையொன்று காணப்படவில்லை. எவ்வாறான போதிலும் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு குறித்த மாவட்டச் செயலகங்களுக்கும் கமநல சேவை மத்திய நிலையங்களுக்கும் அறிவுரைகளும் உதவியும் வழங்கப்பட்டவாறு தொடர்ச்சியாக பின்பற்றல் மூலம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பின் தொடர் நடவடிக்கைகள் முறைமைப்படுத்தப் பட்டு நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு போதிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியமை. |
| (ஆ) திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 1,652,917 பெறுமதியான நிலுவை முற்பண மீதி, கொழும்பு தந்தநாயத்தன இல் 2002 சனவரி 22 ஆந் திகதி இடம்பெற்ற சம்பளக் கொள்ளைக்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 2,408,460 ஆன | திருகோணமலை மாவட்டச் செயலகத்தினால் தீர்ப்பனவு செய்ய வேண்டிய ரூபா 1,652,917 ஆன கடன் மீதி சதோசவிடமிருந்து அறவிப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும் அந்நிறுவனத்தினால் உரிய பதிவேடுகள் இல்லையென தெரிவிக்கப்பட்டமையினால் இன்னமும் நிலுவையாக காணப்படுகின்றது. அதனைத் தீர்ப்பனவு செய்வதற்கு திணைக்களத்தினால் | பின்தொடர் நடவடிக்கைகளை முறைமைப்படுத்தி கடன் மீதியை அறவிட போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | முற்பணங்களிலிருந்து தீர்க்கப்படாது ரூபா 2,288,037 ஆன மீதி 2002 சனவரி 22 ஆந் திகதி முதல் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் அந்நிலுவை முற்பண மீதி 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அறவிட அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வழங்கப்பட்ட அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் தொடர்பிலான தீர்மானத்திற்காக விசாரணை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது.<br><br>கொழும்பு டந்தாயத்தனைய பணம் கொள்ளைக்குரியதாக குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து 5 சதவீதம் எனும்படியாக அறவிடப்பட்டிருந்த பணம் ரூபா 120,423 தொகை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது அத்தொகை அரச வருமானத்திலிருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டு நானாவித முற்பணக் கணக்கிற்கு 2021ஆம் ஆண்டினுள் செலவு வைக்கப்பட்டது. எஞ்சிய தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு தொடுக்கப்பட்டுள்ள வழக்கின் தற்போதைய நிலைமை விசாரிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 07 வருட காலமாக முன்கொண்டு வரப்படும் குருநாகலை மாவட்டச் செயலகத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 349,477 ஆன முற்பண மீதி மற்றும் 2019 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் கமநல சேவைகள் திணைக்களத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 12,552,764 ஆன முற்பண மீதிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | குருநாகலை மாவட்டச் செயலகத்தினால் தீர்ப்பனவு செய்யப்படவேண்டிய ரூபா 349,477 ஆன தொகையை தீர்ப்பனவு செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்காக முறையான விசாரணை சபையொன்றை நியமித்து பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குருநாகலை மாவட்ட செயலகத்தின் பிரதான கணக்காளர் இணங்கியுள்ளார்.<br><br>கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு அநுராதபுர கமநல | பின் தொடர் நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொண்டு நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு போதிய எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தினால் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை தொடர்பில் அறிக்கை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2019 மார்ச் 02 ஆந் திகதி ஏற்பட்டிருந்த அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணக் கொள்ளைக்குரியதாக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 6,321,785 ஆன முற்பணம் 2022 மே 17 ஆந் திகதி வரையிலும் அறவிட தவறவிடப்பட்டிருந்தது. | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் தீர்ப்பனவு செய்யப்படவேண்டிய ரூபா 6,321,785 தொகைத் தொடர்பில் அநுராதபுர பொலிஸ் நிலையத்தின் மூலம் பொலிஸ் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் திருட்டுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நபர்கள் இதுவரை அடையாளங் காணப்படவில்லை என்பதுவும் அதற்காகச் சுகாதார அமைச்சின் விசாரணைப் பிரிவினால் மீண்டும் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டவுடன் மேலதிக நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பின் தொடர் நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொண்டு நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு போதிய எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட குறிப்பு – (iv), பொறுப்புக்கள் தொடர்பான கூற்று – (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 100,059 ஆன | மீண்டெழும் செலவினங்களுக்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சில தவறுதலாக 2022 ஆம் ஆண்டிற்குரிய செலவினத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | நிதிக் கூற்றுகளில் குறித்த அனைத்துப் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளும் இனங்கானக் கூடிய வகையில் உரிய நடைமுறை யொன்று |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்கள் திறைசேறியில் கணனி அச்சீடுகளில் (எஸ்ஏ - 92) உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | அறிமுகப்படுத்தப் பட வேண்டும் |
| (ஆ) | அரச கணக்கீட்டு முறைமையை மேம்படுத்திய காசு அடிப்படையிலிருந்து அட்டுறு அடிப்படைக்கு மாற்றும் முறைக்காக தொழில்நுட்ப மதியுரை நிறுவனமொன்றுடன் 12 மாதக் காலப்பகுதிக்காக 2019 ஜூலை 15 ஆந் திகதி திணைக்களத்தினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2022 ஜனவரி 12 ஆந் திகதிய SA/MAA/02/02/03/-vol(iii) ஆம் இலக்கமுடைய கடிதத்தின் பிரகாரம் அந் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பணிகள் (Deliverables) உடன்படிக்கையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேவைகளுக்காக தொடர்ந்தும் செலுத்த வேண்டிய ரூபா 16,629,560 தொகை 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளாக இனங்கானப்பட்டிருக்க வில்லை. | தொழில்நுட்ப மதியுரை நிறுவனம் இனங்கிய திகதியில் உள்ளபடியாக (Deliverables) வரைபு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் அதற்காக உரிய கொடுப்பனவுகள் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அவசியமான முறையில் அந்த அறிக்கைகளின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கையொன்று சமர்ப்பித்ததன் பின்னரே ஆகும். கணக்கீட்டுச் சட்டகம் மற்றும் நியமம் ஆகியவற்றிற்காக அங்கீகாரம் கிடைத்தமையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் தங்கியுள்ளது. மேற்படி நிலைமையின் அடிப்படையில் தொழில்நுட்ப மதியுரை நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளாக இனங்காணப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களுக்கு உரிய அனைத்துக் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை இனங்காணக்கூடிய வகையில் உரிய நடைமுறை யொன்று அறிமுகப்படுத்தப் பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு அளவைப் பெற்றுக் கொள்ள முடியாமை

**(அ) அரச கணக்கீட்டு முறைமையினை மேம்படுத்திய காசு அடிப்படையிலிருந்து அட்டுறு அடிப்படைக்கு மாற்றும் நடைமுறை**

2018 வரவு செலவுத்திட்ட இலக்கம் 254 இன் பிரகாரம், எதிர்வரும் 10 வருடங்களினுள் நிதிக்கூற்றுக்களை அட்டுறு அடிப்படையில் தயாரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கும் நடைமுறைக்காக சமர்ப்பிக்கப்பட்ட வீதி வழித்திட்டம் (Road Map) உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்காக 2022 மே 12 ஆந் திகதி வரையிலும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | திருத்தப்பட்ட வழித்திட்டத்திற்காக இதுவரையிலும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் திட்டவட்டமான கொள்கைத் தீர்மானமொன்றினை எடுத்த பின்னர் உரிய முறையில் திருத்தப்பட்ட வழித்திட்டத்திற்கான அனுமதி பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | குறித்த கொள்கைத் தீர்மானங்களை துரிதமாக மேற்கொண்டு வழித் திட்டத்திற்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியமை. |
| (ii) | 2021 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உரிய வரவு செலவுத் திட்ட நிதியேற்பாட்டினை மேற்கொண்டு அரச கணக்குகள் திணைக்களத்தின் உப செயற்திட்டமொன்றாக இப் பணியை நடைமுறைப்படுத்தும் போது "இடைக்காலத்திற்கான கணக்கீட்டு நடைமுறையினை அறிமுகப்படுத்தி பேணிச் செல்லல்" உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மே 19 ஆந் திகதி வரையிலும் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமம் (SLPSAS) / சர்வதேச அரசதுறை | இடைக்காலத்திற்கான வரைபாக்கப்பட்ட கணக்கீட்டுச் சட்டகம் மற்றும் கணக்கீட்டு நியமம் கணக்கீட்டு நியமங்கள் 15 கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் இதுவரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை கிடைத்திராமையால் குறித்த கணக்கீட்டுச் சட்டகம் நியமங்கள் இதுவரையிலும் வரைபு மட்டங்களிலேயே காணப்படுகின்றது. | தயாரிக்கப் பட்டுள்ள கணக்கீட்டு நியமங்களுக்கு இலங்கையின் கணக்கீட்டு நியமங்களை வெளியிடும் நிறுவனத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு நியமம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களை உள்ளடக்கிய கணக்கீட்டுச் சட்டகத்தின் வரைபு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 01 இன் 28 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் "நிதிக் கூற்றுக்களுக்குரிய அனைத்து நியமங்களும் அனைத்து தேவைப்பாடுகளுக்கும் இனங்குகின்றதெனின் நிதிக்கூற்றுகளின் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இனங்குகின்றதா என்பது குறிப்பிடப்படக் கூடாது." எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) காசு அடிப்படையின் இடைக்காலத்திற்காக பயன்படுத்துவற்கும் அதிலிருந்து விலகியிருப்பதை நியாயப்படுத்துவதற்கு போதிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள இயலுமையொன்று இல்லாதுள்ளதாக அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2021 செப்டம்பர் 21 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இடைக்காலத்திற்காக அனைத்து நியமங்களையும் பயன்படுத்தாது தெரிவு செய்த கணக்கீட்டு வழிகாட்டிகள் மாத்திரம் | தற்போது உள்ள சட்டச் சட்டகத்தினுள் இடைக்காலத்திற்காக அரசதுறையின் கணக்கீட்டு நியமம் முழுமையாகப் பயன்படுத்தும் இயலுமை இல்லாதுள்ளமையினால் இலங்கை அரசத்துறை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் இடைக்காலத்திற்காக பயன்படுத்தக் கூடிய நடைமுறைக்குச் சாத்தியமான தனியான 15 கணக்கீட்டு நியமங்கள் வரைபாக்கப்பட்டது. | தயாரிக்கப் பட்டுள்ள கணக்கீட்டு நியமங்களுக்கு இலங்கையின் கணக்கீட்டு நியமங்களை வெளியிடும் நிறுவனத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்துவதற்கு அரச கணக்குகள் திணைக்களத்தின் முகாமைத்துவத்தினால் தீர்மானித்துள்ளதாக தொழில்நுட்ப மதியுரையாளரால் தயாரிக்கப்பட்டு 2020 ஜூலை 13 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வழித்திட்டத்தில் (Deliverable 03) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. | | |
| (iv) | மேற்குறிப்பிடப்பட்டவாறு இடைக்காலத்திற்காக SLPSAS பயன்படுத்துவதற்கும் அதிலிருந்து விலகியிருப்பதற்கும் நியாயப்படுத்துவதற்கு போதிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள நிதிக்கூற்றுக்களில் இயலுமை இல்லாதுள்ளதாக குறிப்பிடப்பட்ட போதிலும் இடைக்காலத்திற்காக தயாரிக்கப்பட்ட வரைபு கணக்கீட்டு நியமங்கள் அதாவது இலங்கையின் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிலிருந்து விலகியிருத்தல்கள் பல காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. இதற்கமைய SLPSAS இதிலிருந்து விலகி இடைக்காலத்திற்காக புதிய கணக்கீட்டு நியமங்களை தயாரிக்கும் அடிப்படை தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | தற்போது உள்ள சட்டச் சட்டகத்தினுள் இடைக்காலத்திற்காக அரசதுறையின் கணக்கீட்டு நியமம் முழுமையாகப் பயன்படுத்தும் இயலுமை இல்லாதுள்ளமையினால் இலங்கை அரசத்துறை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் இடைக்காலத்திற்காக பயன்படுத்தக் கூடிய நடைமுறைக்குச் சாத்தியமான தனியான 15 கணக்கீட்டு நியமங்கள் வரைபாக்கப்பட்டது. | தயாரிக்கப் பட்டுள்ள கணக்கீட்டு நியமங்களுக்கு இலங்கையின் கணக்கீட்டு நியமங்களை வெளியிடும் நிறுவனத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | அரச கணககீட்டு நடைமுறையை மேம்படுத்திய காசு அடிப்படையிலிருந்து அட்டுறு அடிப்படைக்கு மாற்றும் நடைமுறைக்காக அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் Ernst And Young நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையேயான மதியுரை சேவை உடன்படிக்கையின் 2.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட நிபந்தனைகள் (திருத்தங்கள் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 12 மாதங்களில் இந்த உடன்படிக்கை காலாவதியான போதிலும் அதற்குரிய திருத்தங்கள் 2022 மே 12 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. | பரிமாற்றல் நடைமுறையில் திட்டவட்டமான கொள்கைரீதியான தீர்மானமொன்றை எடுத்த பின்னர் மதியுரை சேவை உடன்படிக்கைக்கு உரிய திருத்தங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குரிய பணிகளை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**(ஆ) அரச நிதிப் புள்ளிவிபரங்களை தயாரித்தல்**

சர்வதேச நாணய நிதியத்தின் அங்கத்துவ நாடொன்றாக அரச நிதி புள்ளிவிபர கையேடு – 2014 (GFSM – 2014) இன் பிரகாரம் நிதித் தரவு வகைப்படுத்தல் மற்றும் நிதி புள்ளிவிபரங்களை தயாரித்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இணைப்புக்குழு (CC) இற்காக தொடர்பு விதிகள் (TOR) தயாரித்தல் வரைபு கட்டத்தில் காணப்படுவதுடன் 2022 பெப்ரவரி மாதத்தில் நடாத்தப்பட்ட தொழில்நுட்ப உதவி மேவுகை (Technical Assisstance Mission) ஊடாக அப்பணிகளை நிறைவு செய்து உடன்படிக்கையினை முடிவுறுத்துமாறு சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. | இணைப்பு விதிகள் (TOR) தொடர்பில் மேலதிக இணைப்புக்குழு (CC) கூட்டத்தில் கலந்துரையாடி சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்படும் அதற்கு அடுத்த தொழில்நுட்ப உதவி மேவுகையில் (Technical Assisstance Mission) இணைப்பு விதிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளது. | தொழில்நுட்ப உதவி மேவுகையில் இணைப்பு விதிகளை நிறைவு செய்ய வேண்டியமை |

| | | | |
|---|---|---|---|
| (ii) | Budgetary Central Government (BCG) இன் -Extra Budgetary Units (EBU) இற்காக 2015-2018 நிதியாண்டுகளுக்குரிய அரச நிதிப் புள்ளி விபரங்களை சேகரித்தல் மற்றும் தயாரிப்பிற்காக 2021 ஆகஸ்ட் மாதமளவில் நிறைவு செய்ய உத்தேசித்திருந்த போதிலும் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் அப்பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | Extra Budgetary Units உருவாக்குவதற்கு முன்னர் அரசிற்குரிய அனைத்து வியாபார நிறுவனங்களும் 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் மதிப்பீடு மற்றும் வகைப்படுத்தப்பட வேண்டியதாக காணப்பட்டது. சில நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிராமை மற்றும் அந்நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் உரிய காலத்தினுள் வழங்க தவறியிருந்த காரணத்தால் அரசிற்குரிய வியாபார நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களை சேகரிக்கும் நடைமுறை தாமதமடைந்திருந்தது. | அரச நிதிப் புள்ளிவிபரங்களை சேகரித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் பணிகள் துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டியமை. |
| (iii) | அரச நிதிப் புள்ளிவிபர கையேடு - 2014 இன் பிரகாரம் நிதிச் செயலாற்றலுக்கு (Financial operation) மற்றும் நிதி நிலைமைக்கு (Financial position) உரிய தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல் அவசியமான போதிலும் Extra Budgetary Units இன் பகுப்பாய்வு மீளாய்வாண்டிற்காக (Analytical Review) திணைக்களத்தினால் வருமானக் கூற்றுத் தரவுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | அரசிற்கு சொந்தமான வியாபார நிறுவனங்களின் பகுப்பாய்வு மற்றும் Extra Budgetary Units இன் அரச நிதிப் புள்ளிவிபரங்களின் தயாரித்தல் ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரு பணிகளாகும்.<br><br>ஆரசிற்கு சொந்தமான வியாபார நிறுவனங்களை பகுப்பாய்வு செய்வதற்காக நிதிச் செயலாற்றலுக்குரிய தரவுகள் மாத்திரம் பயன்படுத்தப்படும் Extra Budgetary Units இன் அரச நிதித் தரவுகளைத் தயாரிக்கும் போது நிதிச் செயலாற்றலுக்கும் நிதி நிலைமைக்குமுரிய தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன. | அரசிற்கு சொந்தமான வியாபார நிறுவனங்களின் பகுப்பாய்வு மற்றும் அரச நிதிப் புள்ளிவிபரங்களை தயாரிக்கும் பணிப்பொறுப்பு துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டியமை |
| (iv) | 2019 ஆம் ஆண்டின் போது தொழில்நுட்ப உதவி மேவுகை (Technical Assistance Mission) இனால் வழங்கப்பட்ட விரிவான செயல் நடவடிக்கைத் | அரச கணக்குகள் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக Partial Central Government இன் அரச நிதிப்புள்ளி விபரங்கள் | உரிய காலப்பகுதியினுள் முறையான அங்கீகாரங்கள் கிடைத்த Partial |

<table>
<tr>
<td></td>
<td>திட்டத்தின் பிரகாரம் Partial Central Government (BCG) இன் 2015 நிதி ஆண்டு மற்றும் Budgetary Central Government இன் 2015-2018 நிதியாண்டுக்கான GFSM-2014 அடிப்படையாகக் கொண்ட அரச நிதி புள்ள விபரங்கள் முறையே 2020 செப்தெம்பர் மற்றும் 2021 யூன் மாதங்களில் சர்வதேச நாணய நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அதனை நிறைவேற்ற தவறியிருந்தது.</td>
<td>2015-2018 வரையிலும் Budgetary Central Government இன் அரச நிதிப்புள்ளி விபரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது தயாரிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தலைவர்களின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளும் போது சர்வதேச நாணய நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்படக் கூடாது.</td>
<td>Central Government இன் அரச புள்ளி விபரங்கள் மற்றும் Budgetary Central Government இன் அரச நிதிப் புள்ளி விபரங்களும் உரிய காலப்பகுதியினுள் உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியமை.</td>
</tr>
<tr>
<td>(v)</td>
<td>2019 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப உதவி மேவுகை (Technical Assistance Mission) இனால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் 2022 மே 12 ஆந் திகதி வரை நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.<br><br>
<table>
<tr><th>பரிந்துரை</th><th>விபரம்</th></tr>
<tr><td>3</td><td>அதிகாரிகளினால் அண்மைய நான்கு வருடங்களுக்காக உள்ளூராட்சி தொடர்பான ஆரம்ப மதிப்பீடு ஒருங்கிணைக்கப் பட வேண்டியமை.</td></tr>
<tr><td>6</td><td>அரச கணக்குகள் திணைக்களத்தினால் பொது முயற்சிகளுக்காக காலாண்டு அடிப்படையில் வருமானம், செலவினம் மற்றும் ஐந்தொகைக்குரிய தரவுகளை சேகரித்தல் பாதுகாக்கப்படல்.</td></tr>
</table>
</td>
<td>2019 ஆம் ஆண்டின் போது தொழில்நுட்ப உதவி மேவுகையினால் வழங்கப்பட்ட சில பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தியிராமைக்கு பின்வரும் காரணங்கள் தாக்கமளித்திருந்தன.<br>
• அரச நிதி புள்ளி விபரங்களை தயாரிக்க வேண்டிய நிறுவன உள்ளடக்கம் (Coverage) இனை வியாபிக்கும் நடைமுறைகள் மற்றும் பாரிய முயற்சியொன்று மேற்கொள்ளப்பட வேண்டியமை.<br>
• காலாண்டு ரீதியாக அரச நிதி புள்ளி விபரங்களை தயாரிக்குமாறு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் அரச முயற்சி நிறுவனங்கள் காலாண்டு ரீதியாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்காமையால் அப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் நடைமுறைக்குச் சாத்தியமாக</td>
<td>தொழில்நுட்ப உதவி மேவுகை வழங்கிய சில பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர் கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்படுதல் அத்தியாவசிய மானதாகும்.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 10 | அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் சந்தை மற்றும் பெயரளவு மதிப்பீடுகளுக்கு அங்கீகரிக்கப்படல் | இல்லாதிருந்தமை. |

**(இ) பொது வைப்புக் கணக்குகளை ஆரம்பித்தல் மற்றும் பேணிச் செல்லல்**

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பொது வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 82.32 பில்லியனாக காணப்பட்டதுடன், இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பொது வைப்புக் கணக்கின் தேறிய மீதி ரூபா 82.32 பில்லியனாக காணப்பட்டது. மாவட்ட செயலகம் மற்றும் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தில் நிலவிய ரூபா 10.93 மில்லியனான வரவு மீதியை சீராக்கங்களின் மூலம் தேறிய மீதி கணிப்பிடப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானதாகும்.<br><br>இது தொடர்பில் கொழும்பு மாவட்ட செயலகத்தினால் 6003/0/0/01/00/00 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் உள்ள ரூபா 10 மில்லியன் வரவு மீதி 2007 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்பட்ட மாற்றல் பத்திரத்தில் தவறான கணக்கு பதிவு காரணமாக ஏற்பட்டுள்ளதுடன் அத்தவறு கணக்குப் பொழிப்பின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வைப்புக் கணக்கின் வரவு மீதிகள் காணப்படுதல் சரியான கணக்கீட்டு நடைமுறை அல்ல என்பதால் அவ்வாறான நிலைமைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ii) | 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 6003 தொகுதியில் வைப்புக் கணக்கு பூச்சியமாக்குவதற்கு உத்தேசித்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு முதல் அப்பணிகள் வருடாந்த மதிப்பீட்டின் ஊடாக மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் கணக்கு இலக்கம் 6003/1 | | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | இன் கீழான வைப்புக் கணக்கில் ரூபா 10 மில்லியனான மீதியை தீர்ப்பனவு செய்யாது தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது. அவ்வாறே இக்கணக்கு பல வருடங்களாக முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்டது. | | |
| (iii) | மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 20 நிறுவனங்களில் காணப்பட்ட 104 வைப்புக் கணக்குகளின் ரூபா 2,043,617,947 கூட்டுத்தொகை 02 முதல் 05 வருடங்கள் வரையிலான காலவீச்சில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | நீண்டகாலமாக முன்கொண்டுவரப்படும் வைப்புக் கணக்குகள் தொடர்பில் 187 நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொது வைப்புக் கணக்கு மீதி இணக்கக்கூற்று மற்றும் காலப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் நிதிப்பிரமாணம் 570 இன் கீழ் முதிர்வடைந்த வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு தொடர்ச்சியாக குறித்த நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | காலாவதியான வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

**(ஈ) அரச சேவைகள் பரஸ்பர பிணைப் பொறுப்புச் சங்கத்தின் செயற்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1947 செப்தெம்பர் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட 9773 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள அரச சேவைகள் பரஸ்பர பிணைப்பொறுப்பு சங்கம் நிதிப்பிரமாணம் 880 முதல் 893 வரையிலும் பிரமாணங்களில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க | அரச சேவைகள் பரஸ்பர பிணைப்பொறுப்பு சங்கம் பிணை வைக்க வேண்டிய அரச உத்தியோகத்தர்களுக்காக தாபிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்று மாத்திரம் என்பதுடன் அங்கத்தவர்களுக்கு வைக்கப்பட வேண்டிய பிணை பெறுமதியை | பிணை வைக்க வேண்டிய நிறுவன மொன்றான அரச சேவைகள் பரஸ்பர பிணைப்பொறுப்பு சங்கத்தினால் நாளதுவரையாக்க படவேண்டிய சந்தர்ப்பங்கள் குறித்த |

| | | |
|---|---|---|
| பேணிச் செல்லப்படுவதுடன் 2022 மே 12 ஆந் திகதி வரையிலும் அதன் 4,870 அங்கத்தவர்களுக்காக பிணை வைப்புக்களை வழங்கியிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரச சேவைகள் பரஸ்பர பிணைப்பொறுப்பு சங்கத்தின் கணக்கின் மீதி ரூபா 370,023 ஆகும். அவ்வாறே ஒவ்வொரு உத்தியோகத்தர்களினாலும் பிணை வைக்கப்பட வேண்டிய பெறுமதி 2022 மே 12 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தீர்மானிக்கும் சட்ட அதிகாரம் சங்கத்திடம் காணப்படவில்லை. | அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டியமை. |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 40,122,186 ஆன நிதியல்லாத சொத்துக்களின் மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ள மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய இயந்திரம் மற்றும் உபகரணங்களின் (2.2- Other Machinery Equipment) பெறுமதி ரூபா 2,731,589 ஆகும். ஏசீஏ-6 மாதிரிக்கமைய அப்பெறுமதி அலுவலக உபகரணங்கள், கணனி உபகரணங்கள் மற்றும் தளபாடங்களின் கொள்வனவுகளை கொண்டுள்ளதுடன் அந்த ஒவ்வொரு தொகுதிக்குமுரிய கொள்வனவுகளின் பெறுமதி | ஒவ்வொரு தொகுதியிலும் உரிய கொள்வனவு பெறுமதிகள் 2021 ஆம் ஆண்டின் நிதி மூலதன உறுதிச்சீட்டுக்களை பரீட்சித்ததன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். | ஒவ்வொரு தொகுதிக்குமுரிய கொள்வனவுகளின் பெறுமதிகளை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் ஆவணங்கள் பேணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்துவதற்கு போதிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை 04 ஆம் பந்தியின் பிரகாரம் வாகனமொன்றின் உள்ளக பழுதுபார்த்தல்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கூறுவிலைகளின் நியாயத் தன்மை தொடர்பில் அரசின் தகைமை வாய்ந்த இயந்திர பொறியியலாளர் ஒருவரின் அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அறிக்கையொன்றினை பெற்றுக்கொள்ளாது நிதியமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தரின் பரிந்துரையுடன் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | நிதியமைச்சின் தகைமை வாய்ந்த இயந்திர பொறியியலாளர் ஒருவர் இல்லாதிருந்தமையால் நிதியமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தரின் பரிந்துரையின் அடிப்படையில் வாகன பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2022.04.01 திகதி முதல் சனாதிபதி செயலகத்தின் இயந்திர பொறியியலாளர் அல்லது தொழில்நுட்ப சபையின் இயந்திர பொறியியலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் அனைத்து பழுதுபார்த்தல்களையும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய தகைமை வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து குறித்த அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியமை. |

## 3.3 அரச உத்தியோகத்தர்களை பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 11 ஆந் திகதி பிரதி பணிப்பாளர் (கணக்கு) பதவிக்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர் 2022 ஏப்ரல் 27 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 881 இன் பிரகாரம் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதிப் பணிப்பாளரின் (நிதி) கோரிக்கை பத்திரம் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**4. மனிதவள முகாமைத்துவம்**

**4.1 ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தில் நிலவிய 50 வெற்றிடங்களில் 11 சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்கள் ஆகும். | கடந்த வருடத்தில் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக சிரேஷ்ட மட்டத்தில் மூன்று (03) பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தின் ITMIS பிரிவிற்காக சிரேஷ்ட மட்டத்தில் எட்டு (08) பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.<br><br>புதிய பதவிகளுக்காக உத்தியோகத்தர் களை நியமிக்குமாறு நிதியமைச்சின் செயலாளர் ஊடாக ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணியை திருத்தி யமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |